இதழ் 01 | பதிப்பு 01 | மார்கழி 2024

CODL@UOJ

செய்தி மடல்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் தனது 33 ஆம் ஆண்டு நிறைவை 2024 இல் பெருமையுடன் கொண்டாடுகின்றது. இது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் வெற்றிகரமான செயற்பாட்டுடன் ஈடுபட்டு வருகின்றது. 1991ல் வெளிநிலை பட்டப்படிப்பு பதிவு மற்றும் பரீட்சை அலகு என்று பெயரிடப்பட்ட இந்த திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், பாரம்பரிய பல்கலைக்கழக அமைப்பில் உள்வாங்கப்படாத மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. அந்தவகையில், அன்றைய கலைப்பீடப் பீடாதிபதியான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இந்த முயற்சிகள் இடம்பெற்றதுடன் தொடர்ந்து, துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வலகு ஏப்ரல் 22 ஆம் திகதி கலைமாணி மற்றும் வணிகமாணி ஆகிய ஆரம்பப் பட்டப்படிப்புக்களை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தியது.

காலத்திற்குக்காலம், இந்த அலகு அதன் கல்வித்திட்டங்களை விரிவுபடுத்தியது. அந்தவகையில் 2009 இல் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்தியது. 2010 இல் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் நேர்முகக் கற்றல் மற்றும் தொலைதூரக் கற்றல் மூலம் ஒரு அரையாண்டு அடிப்படையிலான அமைப்புக்கு மாற்றப்பட்டது. 2012 இல் இவ்வலகானது அதன் வளர்ச்சி மற்றும் புதுமையில் ஒரு புதிய அத்தியாயத்தை அடையாளப்படுத்தும் வகையில் திறந்த மற்றும் தெலைக்கல்வி நிலையம் எனப் பெயரிடப்பட்டது. இதன் 33 ஆவது நிறைவைக் கொண்டாடும் வேளையில், 33 ஆண்டுகால வளர்ச்சி மற்றும் புதுமைகளைக் கௌரவிக்கும் வகையில், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது கலைமாணி, வணிகமாணி மற்றும் வியாபார முகாமைத்துவமாணி உள்ளிட்ட மூன்று பட்டப்படிப்புக்களுக்கு மேலதிகமாக 20 இற்கும் மேற்பட்ட சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக் கற்கைநெறிகளை வழங்கிவருகின்றது. மேலும், 2014 இல் E-Hall கட்டிடத்தினை நிர்மாணித்து மாணவர்களுக்கான கல்விவசதி விரிவுபடுத்தப்பட்டது. தற்போது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது தரமான கல்வியை அனைவருக்கும் வழங்கும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருப்பது அதன் வெற்றிக்கு ஒரு சான்றாகும்.

துணைவேந்தரின் செய்தி

எந்தக் கற்பனையையும் விட நிஜம் அழகானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையக் கல்வித் திட்டங்கள் சமூக உள்ளடக்கத்தினையும் வாழ்நாள் முழுவதும் அனைவருக்குமான கல்வியினையும் வழங்குவதனால் அர்த்தமுள்ளதாக மாறிவருகின்றன. இந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் தற்போது வியாபார முகாமைத்துவமாணி, வணிகமாணி மற்றும் கலைமாணி எனும் மூன்று பட்டப்படிப்புக்களை வழங்குகின்றது. இக்கல்வித் திட்டங்களில் வருடாந்தம் 850 மாணவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றார்கள். மேலும், 20 இற்கும் மேற்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை சமூகத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்து மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் தனது முதலாவது செய்திமடலை வெளியிடுவது பாராட்டுதற்குரிய முயற்சி ஆகும். இது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகளை வெளிக்கொணர்வதுடன், அவை தொடர்பான முக்கியமான தகவல்களை மாணவர்களிற்கும், ஊழியர்களுக்கும் பரந்த சமூகத்திற்கும் வழங்குகின்றது. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் தொடர்ந்தும் தனது சேவைகளை விரிவுபடுத்தி பரந்த அளவில் சேவைபெறுநரைச் சென்றடைவதுடன் எமது சமூகத்தின் தனிநபர்களையும் வலுவூட்டும் என நான் நம்புகின்றேன். இவ்வாறு செய்வதன் மூலம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது பலருடைய வாழ்க்கையில் நிலைத்திருக்கும் செல்வாக்கினை ஏற்படுத்துவதோடு எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் ஊக்கமளிப்பதாக விளங்கும் எனலாம். திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் சேவைகளைச் சிறப்பாக முன்னெடுத்து வரும் பணிப்பாளர் பேராசிரியர் ஜே. றொபின்சன் மற்றும் அவரது குழுவினரை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.
எல்லாப் புகழும் எல்லாம் வல்ல இறைவனுக்கே!

பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய நிறுவுநரின் செய்தி



திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் முன்மொழியப்பட்ட செய்திமடலிற்கு ஒரு செய்தியை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது முப்பத்துமூன்று வருட வரலாற்றை நன்கு நிறுவப்பட்ட அலகில் நடத்துகின்றது. கல்விசார் ஊழியர்களின் ஆதரவுடன் வினைத்திறனாகச் செயற்படுகின்றது மற்றும் பல பட்டப்படிப்புக்கள், தகைமைச்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளையும் நடாத்தி வருகின்றது.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பல கல்விமுறைகள் மூலம் மாணவர்கள் வலுவூட்டப்படுகின்றனர். குறிப்பாக, பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்ட மாணவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக தங்களின் கல்வி அபிலாசைகளை நிறைவேற்றுமாறு நான் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமும் தனது செயற்பாடுகளைச் செழுமைப்படுத்தி மேம்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் உபவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பணிப்பாளரின் செய்தி

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் முதலாவது செய்திமடலின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். 1991 இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது ஆரம்பம் முதல் இன்றுவரை சமூகத்திற்குச் சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது பல ஆண்டுகளாக சமூகத்தின் தேவைகள் மற்றும் மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் தன்னை வளர்த்துக்கொண்டு தற்போது மூன்று பட்டப்படிப்புக்களுடன், இருபதிற்கும் மேற்பட்ட சான்றிதழ் மற்றும் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்குகின்றது என்பதில் பெருமிதம் கொள்கின்றோம். இக் கல்வித்திட்டங்கள் தனிநபர்களை வலுவூட்டும் வகையிலும், வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிக்கும் வகையிலும், அணுகக்கூடிய உயர்தரமான கல்வியைத் தொடர்ச்சியாக வழங்கும் வகையிலும் துல்லியமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எமது கல்விச்சேவைகள் பொருத்தமானவையாகவும், தாக்கத்தினை ஏற்படுத்துவனவாகவும் இருப்பதனை உறுதிசெய்யும் வகையில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் செயற்பாடுகளைப் புதுப்பிக்கவும், தகவமைத்துக்கொள்ளவும் எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான முயற்சிகளை இச் செய்திமடல் முன்னிலைப்படுத்துகின்றது. கல்விவாய்ப்புக்களை விரிவுபடுத்தல், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வளர்ச்சியை ஊக்குவித்தல், சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தல் போன்றவற்றிற்குத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது ஒரு முக்கிய சக்தியாக இருக்கின்றது என நாம் கருதுகின்றோம். இச் செய்திமடல் மூலம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் முன்னேற்றம் மற்றும் சாதனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.
அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கவும், சாதகமான விளைவுகளை ஏற்படுத்தவும் நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து உழைப்போம்.

பேராசிரியர். ஜேம்ஸ் றொபின்சன்
பணிப்பாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி
நிலையம்.

உதவிப் பதிவாளரின் செய்தி

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வெளியிடப்படும் செய்திமடலின் ஆரம்ப இதழினை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வெளியீடானது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பல்வேறு வகையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கும், செய்திகளையும், சாதனைகளையும் பகிர்ந்துகொள்வதற்குமான ஒரு புதிய தளத்தினை எமது சமுதாயத்திற்கு வழங்குகின்ற குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அடையாளப்படுத்தப்படுகின்றது. தற்போது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது மூன்று பட்டப்படிப்புக்களையும், இருபதிற்கு மேற்பட்ட சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளையும் வழங்கிவருகின்றது. இச்செய்திமடலானது தகவல்களை மாணவர்களுக்கு பயன்தரும் வகையில் ஈடுபடுவதற்கு துணைபுரியும் என நம்புகின்றோம். எமது தொடர்ச்சியான வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் தங்களின் ஆதரவு மற்றும் பங்களிப்பு மிகவும் விலைமதிக்க முடியாததாக அமையும்.

திருமதி. கோ கினி சபரிதன்,
உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

பழைய மாணவரின் வாழ்த்துக் குறிப்பு

முப்பது ஆண்டுகளிற்கும் மேலான திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் செயற்பாடுகளுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது நாட்டின் கல்விமுறையால் வெகுசிலரே உள்ளகப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பைத் தொடர்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அனை த்து ஆர்வமுள்ள பட்டதாரிகளுக்கும் சமமான கல்விவாய்ப்பினை வழங்கும் வகையில், இலக்கை அடையத்தேவையான முயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் அற்றல் என்பவற்றுடன் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் செயற்பட்டுவருவதனை எண்ணி பெருமிதம் கொள்கின்றேன். நான் இந்நிலையத்தின் மூலம் வியாபார முகமைத்துவமாணியில் (BBM) எனது முதலாவது பட்டப்படிப்பினை (ONLINE) 4ஆவது அணியில் பெற்றுக்கொண்டேன். இந்தப் பட்டப்படிப்பு எனது வங்கித்தொழிலுக்கு இன்றியமையாதது என்பதனையும், உயர்கல்வியில் எனது தொடர் படிப்பிற்கு அடித்தளமாக அமைந்தது என்பதனையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னைப் போன்று ஆயிரக்கணக்கான பயனாளிகளின் பல்கலைக்கழகக்கனவை நனவாக்கி, அனைவருக்கும் சமமான கல்விவாய்ப்பினை வழங்குவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்ற திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணி பல்லாண்டுகளைத் தாண்டியும் தொடர வாழ்த்துகின்றேன்.
நன்றி.

திரு.ப.திருக்குமார்.
நிர்வாக அதிகாரி.
இலங்கை வங்கி,
வடக்கு மகாண அலுவலகம். யாழ்ப்பாணம்.

மனிதவள மேம்பாடு

கற்றல் முகாமைத்துவம் பற்றிய ஒரு பட்டறை

தை 27, மாசி 2 மற்றும் 10 ஆம் திகதிகளில் கற்றல் முகாமைத்துவம் பற்றிய ஒரு பட்டறை நடாத்தப்பட்டது. இதன் மூலமாக மாணவர்கள் கற்றல் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கான புதிய கருவிகள் மற்றும் நுட்பங்களை பற்றி அறிந்து கொண்டனர்.

மாணவர் தகவல் முறைமை பட்டறை

முதலாம் வருட மாணவர்களுக்கான தகவல் முறைமை பட்டறையானது மாசி 24, 2024 சனிக்கிழமை அன்று மாணவர் தகவல் முறைமை ஒருங்கிணைப்பாளர் திருமதி நிஜானி அவர்களால் நடாத்தப்பட்டது. இதன்மூலம் மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு நிகழ்நிலை மூலம் பதிவு செய்வது மற்றும் பெறுபேறுகளை தெரிந்து கொள்வது பற்றிய நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

38வது பொதுப் பட்டமளிப்பு விழா 2024

38வது பொதுப் பட்டமளிப்பு விழா 16.03.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வு மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த சாதனைகளும் வெளிக்கொணரப்பட்டது.

288 மாணவர்கள் கலைமாணி பட்டப்படிப்பில் (அணி I - 2016) பட்டம் பெற்ற அதேவேளை 42 மாணவர்கள் வணிகமாணி பட்டப்படிப்பை (2022) வெற்றிகரமாக நிறைவுசெய்தனர். இவை கல்வியில் சிறந்து விளங்குவதற்கான அவர்களின் அசைக்க முடியாத இலக்கினை வெளிப்படுத்துகின்றது. இச்சாதனைகளுக்கும் மேலதிகமாக, 31 மாணவர்கள் வங்கியியல் மற்றும் நிதியியலில் தகைமைச்சான்றிதழ் மற்றும் 24 மாணவர்களுக்கு தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச்சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வியாபார முகாமைத்துவமாணி மற்றும் வணிகமாணி பட்டப்படிப்பு மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு

வியாபார முகாமைத்துவமாணி மற்றும் வணிகமாணி பட்டப்படிப்பு மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வானது மாணவர்களின் கல்விப் பயணத்தில் ஒரு ஆரம்பப் படியாக அமைகிறது. முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு மாணவர்கள் தங்கள் கல்வியை ஆரம்பிப்பதற்கான ஒரு அடித்தளமாக அமைந்தது.

வியாபார முகாமைத்துவமாணி மாணவர்களுக்கான பிரிமியர் லீக் 2024

2023ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய வியாபார முகாமைத்துவமாணி மாணவர்களுக்கான பிரிமியர் லீக், ஒரு சிறந்த நிகழ்வு ஆகும். தை மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில்; இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. வியாபார முகாமைத்துவமாணி அணி XI, மாணவர்களால் இவ்விழா சிறப்பாக நடாத்தப்பட்டது. பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், இறுதிப்போட்டி முழுவதும் மாணவர்களால் வெளிப்படுத்தப்பட்ட திறமை மற்றும் ஒத்துழைப்பு என்பன பலராலும் பாராட்டப்பட்டது. இது விளையாட்டில் திறமையை வெளிப்படுத்துவது மட்டுமின்றி, போட்டி முழுவதும் மாணவர்களால் வெளிப்படுத்தப்பட்ட ஒற்றுமை மற்றும் விளையாட்டுக்களின் மீதான ஆர்வம் என்பவற்றைக் கொண்டாடும் வகையில் அமைந்தது.

கலைமாணி மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு 2024

கலைமாணிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு (புதுமுக மாணவர்கள் III) மாணவர்களின் கல்விப் பயணத்தில் ஒரு ஆரம்பப் படியாக அமைகிறது. கார்த்திகை 23, 2024 அன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வு மாணவர்கள் தங்கள் கல்வியை ஆரம்பிப்பதற்கான ஒரு அடித்தளமாக அமைந்தது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா கலந்துகொண்டார். கலைப்பீடத்தின் பீடாதிபதி, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்கள், கலைமாணிக் கற்கை கல்வி இணைப்பாளர், கலைமாணிக் கற்கை ஒருங்கிணைப்பாளர்கள் கலைமாணிக் கற்கைத் துறைத்தலைவர்கள் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் உதவிப் பதிவாளர் ஆகியோருடன் சுமார் 400 மாணவர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வினை சிறப்பித்தனர்.

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் 50ஆவது பொன்விழாக் கொண்டாட்டத்துடன் இணைந்த நிகழ்வுகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் 2024ஆம் ஆண்டு முதன்முறையாக மாணவர்களுக்கிடையில் கல்விசார்ந்த போட்டிகளை நடாத்தியது. ஐப்பசி 19, 2024 அன்று, விவாதப் போட்டி மற்றும் ஆய்வுக்கலந்துரையாடல் மன்றம் என்பன நடைபெற்றன, இது மாணவர்ககளின் அவர்களின் திறமை மற்றும் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. மாணவர்கள் முழுமையான ஈடுபாட்டுடன் பங்குபற்றியமை அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் நேர்முகமான தாக்கத்தினை வெளிப்படுத்துகின்றது.

மேலும், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் சமூகப் பங்களிப்பு என்ற கருப்பொருளின் கீழ், கார்த்திகை 16, 2024 அன்று திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய ஊழியர்கள் மற்றும் மாணவர்களால் மரம் நடுகை நிகழ்வும்; இரத்ததான முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சமூகப் பங்களிப்பின் முன்முயற்சியான செயற்பாடுகளின் ஒரு பகுதியாக, சமூகத்திற்கு திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பங்களிப்பை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்த, மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் காணொளி உருவாக்கும் போட்டியும் நடாத்தப்பட்டது.

கந்தையா அறக்கட்டளை (அவுஸ்திரேலியா) புரிந்துணர்வு உடன்படிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL) சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் கந்தையா அறக்கட்டளையுடன் கூட்டிணைந்தமை சர்வதேச ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த உடன்படிக்கையானது கல்விச் சலுகைகளை வளப்படுத்துதல் மற்றும் உலகளாவிய உறவுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான குறுகியகாலக் கற்கைநெறிகளை முன்வைக்கிறது. இந்தக் கற்கைநெறிகளுள் Teaching Phonological Awareness and Phonics for English in Schools, Teaching Language and Reading Comprehension, and The Lotus Reading Program ஆகியவை அடங்கும்.

கல்வி அபிவிருத்திக் குழுமத்துடன் உடன்படிக்கை

(MOA) கல்வி அபிவிருத்திக் குழுமம் (EDC) மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL) ஆகியவற்றுக்கு இடையே 2024 மார்ச் 12 அன்று. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பாக துணைவேந்தர் கையெழுத்திட்டார். அதேவேளை கல்வி அபிவிருத்திக் கூட்டமைப்பு சார்பில் (EDC) திரு. நடராஜா சச்சிதானந்தன கையெழுத்திட்டார். வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்களின் தொழில்சார் திறன்கள் மற்றும் தகைமைகளை மேம்படுத்துவதற்காக டிப்ளோமா கற்கைநெறியை நடாத்துவதே MOA இன் நோக்கமாகும்.

உள்ளூராட்சி திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

வடக்கு மாகாணத்தில் சொத்து மதிப்பீட்டில் டிப்ளோமா கங்கைநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, குறிப்பாக உள்ளூர் அதிகாரிகளின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சொத்து மதிப்பீட்டில் அவர்களின் நிபுணத்துவத்தை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது, பயனுள்ள நிதி மேலாண்மை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் நிலையான நடைமுறைகளை ஆதரிக்கும் துல்லியமான மதிப்பீடுகளை உறுதிசெய்கிறது.

பங்கேற்பாளர்களின் முதலாவது அணி 24 ஆகஸ்ட் 2024 அன்று கற்கைநெறியைத் தொடங்கியது, இது உள்ளூர் மட்டத்தில் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். பிராந்தியத்தின் நீண்டகால வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற இந்த ஆரம்ப முயற்சி நியாயமான வருவாய் உருவாக்கம், சமமான வரிவிதிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வள முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் தேசிய சமாதானச் சபையுடன் உடன்படிக்கை

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL), சமூகவியல் துறையுடன் இணைந்து, நிலைபேறான சமாதானத்திற்கான உள்ளடங்கல் சேவை வழங்கலில் உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறியை வழங்குவதற்காக, (MoA) உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் தேசிய சமாதானச் சபையுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது. ஒரு கல்வியாண்டுப் பருவத்தில் நடாத்தப்படும் இந்தப் பகுதிநேரக் கல்வித்திட்டம், நிலைபேறான சமாதானம் மற்றும் உள்ளடங்கல் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவுடன் பங்குபற்றுநர்களுக்கு வசதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு பங்களித்து, வினைத்திறனான மற்றும் சமமான நடைமுறைகளை வளர்ப்பதற்கு கோட்பாட்டு மற்றும் நடைமுறை அணுகுமுறைகளைக் கற்கைநெறி ஒருங்கிணைக்கிறது.

ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கத்தினூடான புரிந்துணர்வு உடன்படிக்கை

ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கத்தினுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு இடையே மார்ச் 23, 2024 அன்று கைச்சாத்திடப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக பொதுச்செயலாளர் கடம்பேஸ்வரனும் கையெழுத்திட்டனர் தமிழ்த்துறையின் ஆதரவுடன் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக பண்டிதர் மற்றும் பால-பண்டிதர் கல்வித் திட்டங்களை வழங்குவதை இந்த உடன்படிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஒத்துழைப்பு தமிழ்மொழி வளர்ச்சியில் மொழியியல் சிறப்பையும் கலாசாரப் பாதுகாப்பையும் மேம்படுத்த முயல்கிறது.

தகைமைச்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தல்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது இருபதிற்கும் மேற்பட்ட சான்றிதழ் மற்றும் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்கிவருகிறது. சமூகத்தின் தேவை கருதி தொடர்ந்தும் புதிய கற்கைநெறிகளை அறிமுகம் செய்து வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்கள் இக் கற்கைநெறிகளை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக வழங்கி வருகின்றது. கலைப்பீடம், விஞ்ஞான பீடம், வணிக முகாமைத்துவப் பீடம், மருத்துவ பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் இந்து நாகரீக பீடம் என்பன தத்தமது துறைசார்ந்த சான்றிதழ் மற்றும் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்கி வருகின்றன. ஆற்றுப்படுத்தல் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி பால பண்டிதர் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி மற்றும் உடற்க்கல்வி தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி என்பன இவ் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தகைமைச்சான்றிதழ் கற்கைநெறிக்கு உதாரணமாகக் கூறிக்கொள்ள முடியும். கணிணி மற்றும் மருத்துவ துறைசார்ந்த பல சான்றிதழ் கற்கைநெறிகளை முறையே விஞ்ஞான பீடமும் மருத்துவ பீடமும் காலத்தின் தேவைகருதி அறிமுகப்படுத்தி திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக வழங்கி வருகின்றன. மேலும் பல புதிய சான்றிதழ் மற்றும் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்குவதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வியாபார முகாமைத்துவமாணி இறுதியாண்டு மாணவர்களின் பிரிவுபசார நிகழ்வு

மாசி 18, 2024 அன்று, வியாபார முகாமைத்துவமாணி இறுதியாண்டு மாணவர்கள்-XI தங்கள் விரிவுரையாளர்கள் மற்றும் பிற ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் இதயபூர்வமான பிரிவுபசார நிகழ்வை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்வு ஒரு நினைவூட்டல் மற்றும் மகிழ்ச்சியான ஒன்றுகூடலாக அமைந்தது, அங்கு வெளியேறும் மாணவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி நண்பர்கள் மற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் தலைவர்கள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையமானது வெளிநிலை அலகாக பல முக்கிய நபர்களால் வழிநடாத்தப்பட்டது. அவர்கள் அதன் பரிணாம வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிநிலை அலகானது பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அவரது குழுவினர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் நபர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணைப்பாளர்களாக பணியாற்றி அதன் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர்.

Prof. P. Balasundarampillai
Coordinator
01.09.1991 - 1996.08.31

Mr. M. Nadarajasundaram
Coordinator
01.09.1996 - 31.08.2001

Prof. N. Gnanakumaran
Coordinator
01.09.2001 - 31.08.2002)

Prof. S.T.B. Rajeswaran
Coordinator
2002 - 2008

Prof. K.Gugabalan
Coordinator
2008 - only one month

Mr. S. Sivarajah
Coordinator
15.08.2008 - 13.06.2015

Prof. B. Nimalathasan
Coordinator 14.06.2015 - 31.12.2015
Director
1.1.2016 - 31.08.2020

Prof. Mrs. R. Yogendrarajah
Director
02.09.2020 - 31.10.2023

Prof. J. Robinson
Director
01.11.2023

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய ஊழியர்கள்

பணிப்பாளர்

Professor J. Robinson
Director of CODL.
B.B.A(Hons), M.Com(kln),
PhD(New zealand)
Professor in Human Resource Management

பிரதிப் பணிப்பாளர், பயிற்சி மற்றும் உள்ளக தர உறுதிப்பாட்டு அலகின் இணைப்பாளர்

Prof. (Mrs) R.Thaneswary
B.B.A (Hons) M.Phil (Jfn), PhD
Professor in Human Resource Management

பிரதிப் பணிப்பாளர், பதிவுகள் மற்றும் பரீட்சைகள்

Prof. (Mrs) M.A. Santhakumary
B.com (Hons) MBA (PIM)
HNDC, PhD
Professor in Human Resource Management

பிரதிப் பணிப்பாளர், கற்கைகள் மற்றும் வளங்கள்

Dr.(Mrs).J.Thevananth
B.Sc(Hons) M.sc(kln), PhD
Senior Lecturer Gr I,
Department of Financial Management

பிரதிப் பணிப்பாளர், சான்றிதழ் மற்றும் தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி

Dr.A.Saravanabawan
Senior Lecturer Gr – I
B.B.A (Hons), MBA (pdn), MA (Jfn), PhD (China)
Department of Human Resource Management

இணைப்பாளர், கலைமாணிக் கற்கைநெறி

Dr. (Mrs.) U. Subajini
BA (Hons) MPhil, Phd (Jfn)
Senior Lecturer Gr I,
Department of Geography

இணைப்பாளர் வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

Mr.S.Balaputhiran
B.Com (Hons), M.Com (Kln)
Senior Lecturer Gr I,
Department of Accounting

இணைப்பாளர் வணிகமாணிக் கற்கைநெறி

Mr.M.Umakanth
B.Com (hons) HNDA (Jfn) MA (Jfn) MBA (OUSL)
Senior Lecturer Gr II,
Department of Commerce

உதவிப் பதிவாளர்

Mrs. Kohini Sapatithan
B.Com (Hons) (Pdn),
MPM(Sjp),HNDE

நிகழ்ச்சித்திட்ட மற்றும் முறைமை பகுப்பாய்வாளர்

Mrs.Nijani Niroshan
B.Sc (Hons) in Information Technology (Mrt)
PGDip in Computer Science (Mrt)

Ms.T.Kajanthini
Tutor- Mentor
(Contract)

Ms.S.Mathusha
Tutor -Mentor
(Contract)

Ms.P.Arathiya
Tutor - Mentor
(Contract)

Ms.W.Thirumagal
Tutor -Mentor
(Contract)

Mrs.T.Kalaivani
Tutor - Mentor
(Contract)

Ms.N.Suganiya
Tutor -Mentor
(Contract)

Ms.G.Sarththiga
Tutor - Mentor
(Contract)

Ms.P.Sangeerthana
Tutor -Mentor
(Contract)

Mrs.H.Iyswarya
Tutor - Mentor
(Contract)

Ms. A.Thenuja
Tutor - Mentor
(Contract)

Mr. B. Sayanthan
Tutor - Mentor
(Contract)

Ms. N.Dilogini
Tutor - Mentor
(Contract)

Ms. K.Nithya
Tutor - Mentor
(Contract)

Mrs.D.Ajanthini
MA – Gr- III

Mr.P.Pathmanathan Office
Machine Operator

Ms.Thadsika MA
Gr III

Mrs.S.Gowriga
MA Gr - III

Ms.A.Marijo
MA Gr- III

Mr.T.Changeevan
MA Gr- III

Ms.M.Subapiratha
MA (Contract)

Mrs.T.Tharsini
MA (Contract)

Ms.R.Niruba
Trainee, MA

Ms.Y.Kirusha
Trainee, M A

Ms.R.Kalaimathy
Trainee, MA

Mr.S.Paviththiran
Technical Officer
(Contract)

Compiled and Editorial Lead by Ms.Thirumagal willinson
Language Editorial Lead by Ms. Suganiya Naguleshwaran and Ms. Gnaneswaran Sarththiga

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

https://www.codl.jfn.ac.lk